பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
16 08 2024 **FRIDAY** 7 15 **AM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. சிறிய வகை செயற்கைக்கோள்களை செலுத்தும் **SSLV-D3** ராக்கெட் இன்று காலை மணி 9.17-க்கு விண்ணில் செலுத்தப்படவுள்ளது.

2. குடியரசுத்தலைவர் மாளிகையில் உள்ள அமிர்த தோட்டம், இன்று முதல் அடுத்த மாதம் 15ஆம் தேதிவரை பொதுமக்களின் பார்வைக்காக திறக்கப்படுகிறது.

3. குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர், தெலங்கானா மற்றும் ஆந்திரப்பிரதேசத்தில் இன்று முதல் 2 நாட்கள் பயணம் மேற்கொள்கிறார்.

4. மேற்குவங்க மாநிலம், கொல்கத்தாவில் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பயிற்சி பெண் மருத்துவர் ஒருவர் கொலை செய்யப்பட்டது தொடர்பாக, 9 பேரை காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

5. தமிழ்நாடு, மேற்குவங்க மாநிலங்கள் மற்றும் புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் சில இடங்களில் நாளை வரை மிக கனமழைக்கு வாய்ப்பிருப்பதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

புவி கண்காணிப்பு செயற்கைக்கோள் **EOS-08, SSLV-D3** ராக்கெட் மூலம் இன்று விண்ணில் செலுத்தப்படவுள்ளது.

ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சத்திஷ்தவன் விண்வெளி மையத்திலிருந்து இன்று காலை மணி 9.17-க்கு விண்ணில் ஏவப்படவுள்ளது. இதற்கான கவுன்டவுன் அதிகாலை மணி 2.47-க்கு தொடங்கியது.

இந்த செயற்கைக்கோள், பேரிடர் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளை கண்காணிக்க உதவும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - ஜாய் 57 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

குடியரசுத்தலைவர் மாளிகையில் உள்ள அமிர்த தோட்டம், இன்று முதல் அடுத்த மாதம் 15ஆம் தேதிவரை பொதுமக்களின் பார்வைக்காக திறக்கப்படுகிறது.

பராமரிப்பு நாளான திங்கட்கிழமை தவிர மற்ற நாட்களில், காலை 10 மணி முதல் மாலை 6 மணிவரை இத்தோட்டத்தை கட்டணமின்றி பார்வையிடலாம்.

தேசிய விளையாட்டு தினத்தை ஒட்டி, வரும் 29ஆம் தேதியன்று விளையாட்டு வீரர்களும், ஆசிரியர் தினத்தை ஒட்டி செப்டம்பர் 5ஆம் தேதி ஆசிரியர்களும் இந்த தோட்டத்தை பார்வையிட பிரத்யேகமாக அனுமதிக்கப்படுவார்கள்.

அமிர்த தோட்டத்தை பார்வையிட விரும்புவோர் **rashtrapatibhavan.gov.in** என்ற இணையதளத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

மறைந்த முன்னாள் பிரதமர் பாரத ரத்னா அடல் பிஹாரி வாஜ்பேயி நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி, புதுதில்லியில் உள்ள அன்னாரது நினைவிடத்தில் பிரார்த்தனை கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**>>>>><<<<<**

குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர், தெலங்கானா மற்றும் ஆந்திரப்பிரதேசத்தில் இன்று முதல் 2 நாட்கள் பயணம் மேற்கொள்கிறார்.

தெலங்கானா மாநிலம் ஹைதராபாதில் இன்று அவர் **Kanha Shanti Vanam** தியான மையத்திற்கு செல்கிறார்.

நாளை அவர், ஆந்திரப்பிரதேச மாநிலம், நெல்லூரில் உள்ள **Akshara Vidyalaya** வளாகம் மற்றும் திறன் மேம்பாட்டு மையத்திற்கு பயணம் மேற்கொள்கிறார்.

அதைத் தொடர்ந்து, **Venkatachalam** செல்லும் அவர் அங்குள்ள **Swarna Bharat** அறக்கட்டளையின் ஆண்டுவிழாவில் சிறப்பு விருந்தினராக பங்கேற்கிறார் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**>>>>><<<<<**

வேளாண் நிலங்களில் பயிர்களை அழிக்கும் பூச்சிகளை அறியும் வகையில், தேசிய பூச்சி கண்காணிப்பு அமைப்பு முறையை மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தொடங்கி வைத்தார்.

புதுதில்லியில் நடைபெற்ற இதற்கான நிகழ்ச்சியில் பேசிய அவர், இந்த அமைப்பு மூலம், பல்வேறு பூச்சிக்கொல்லிகளின் வகைகளை விவசாயிகள் அறிந்து, தங்களது பயிர்களை பாதுகாக்க முடியும் என்று கூறினார்.

விவசாயிகளின் நலனுக்காக மத்திய அரசு மேற்கொண்டு வரும் பல்வேறு திட்டங்களின் பயனாளிகளுடன் திரு. சிவராஜ் சிங் சௌஹான் உரையாடினார்.

**>>>>><<<<<**

பிரபல ஏவுகணை விஞ்ஞானி டாக்டர் **Ram Narain Agarwal** காலமானார். அவருக்கு வயது 84.

அவரது மறைவுக்கு பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் இரங்கல் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சமூகவலைதளத்தில் வெளியிடப்பட்டுள்ள பதிவில், பத்மஸ்ரீ, பத்மபூஷன் விருது பெற்றுள்ள அவர், 20 வருடங்களுக்கு மேலாக, அக்னி ஏவுகணை திட்டப் பணியில் முக்கிய பங்காற்றியுள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

சிறந்த விண்வெளி விஞ்ஞானியாக டாக்டர் **Ram Narain Agarwal** திகழ்ந்தார் என்றும் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் தெரிவித்துள்ளது.

**>>>>><<<<<**

அஸ்ஸாம் மாநிலத்தில் பாதுகாப்புப் படையினர் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.

அம்மாநிலத்திற்கு உட்பட்ட 22 இடங்களில் வெடிகுண்டுகள் வைத்துள்ளதாக தடை செய்யப்பட்ட உல்ஃபா அமைப்பு அறிவித்ததை அடுத்து, இந்த தேடுதல் வேட்டை நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இருப்பினும், சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் எந்தவொரு பொருளும் பறிமுதல் செய்யப்படவில்லை என்று அம்மாநில காவல்துறை தலைவர் திரு. ஜி.பி. சிங் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

மேற்குவங்க மாநிலம், கொல்கத்தாவில் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பயிற்சி பெண் மருத்துவர் ஒருவர் கொலை செய்யப்பட்டது தொடர்பாக, 9 பேரை காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

மொத்தம் 26 பேர் இச்சம்பவத்தில் தொடர்புடையவர்களாக கண்டறியப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே, அந்த மருத்துவக் கல்லூரியின் மருத்துவமனைக்கு சிபிஐ அதிகாரிகள் நேற்று சென்று விசாரணை நடத்தினர்.

இவ்வழக்கில் தொடர்புடைய 8 மருத்துவர்களிடமும், மருத்துவரின் பிரேத பரிசோதனை நடத்திய மூன்று மருத்துவர்களிடமும் சிபிஐ அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டனர்.

இந்நிலையில், சிபிஐ-யின் மற்றொரு குழுவினர் வடக்கு 24 பர்கானாஸ் மாவட்டத்தில் **Sodepur-**ல் உள்ள, கொல்லப்பட்ட பயிற்சி பெண் மருத்துவரின் இல்லத்திற்கு சென்று அவரது பெற்றோரிடம் இதுகுறித்து விசாரணை மேற்கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்நிலையில், சம்பவம் நடைபெற்ற மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு மேற்குவங்க ஆளுநர் திரு. சி.வி. ஆனந்த போஸ் சென்று விசாரித்தார்.

இதற்கிடையே, இச்சம்பவத்திற்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில், நாடுமுழுவதும் உள்ள மருத்துவமனைகளில் இன்று காலை 6 மணி முதல் 24 மணி நேரத்திற்கு, புறநோயாளிகள் சேவையை புறக்கணிப்பதாகவும், குறிப்பிட்ட சில அறுவை சிகிச்சைகள் நடைபெறாது என்றும் இந்திய மருத்துவ சங்கம் அறிவித்துள்ளது.

எனினும், அவசர சிகிச்சைப் பிரிவு சேவைகள் தொடரும் என்றும் து கூறியுள்ளது.

>>>>><<<<<

இந்தியா - ஸ்வீடன் கடற்படை இடையே நட்புறவை வளர்க்கும் வகையில், இந்திய கடற்படை வீரர்களுடன் **INS Tabar** கப்பல் இரண்டு நாள் பயணமாக ஸ்வீடன் நாட்டின் **Gothenburg** சென்றடைந்தது

கேப்டன் **Harish** தலைமையில் கடற்படையினர் சென்றுள்ளனர்.

இருநாட்டு கடற்படையினர் இடையேயான உறவை வலுப்படுத்துவதும் அதற்கான புதிய வழிவகைகளை கண்டறிவதும் இப்பயணத்தின் நோக்கமாகும்.

இப்பயணத்தின் போது, கடற்படை வீரர்கள் ஸ்வீடன் நாட்டு கடற்படை வீரர்களுடன் பல்வேறு விவகாரங்கள் குறித்து விவாதிக்கவுள்ளனர்.

>>>>><<<<<

ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த ஒருவருக்கு குரங்கு அம்மை நோய் பாதிப்பு ஏற்பட்டுள்ளது கண்டறியப்பட்டுள்ளது.

முதன்முறையாக ஆப்பிரிக்க பிராந்தியத்திற்கு வெளியே ஒருவருக்கு இந்நோய் தாக்குதல் ஏற்பட்டுள்ளது.

அண்மையில் அந்த நபர், ஆப்பிரிக்கா சென்று திரும்பிய நிலையில் இந்த பாதிப்பு அவருக்கு உறுதி செய்யப்பட்டுள்ளதாக ஸீவீடன் அரசு தெரிவித்துள்ளது.

காங்கோ குடியரசில் குரங்கு அம்மை நோய் பாதிப்பு கண்டறியப்பட்டதை தொடர்ந்து இதை உலக சுகாதார அவசர நிலையாக உலக சுகாதார அமைப்பு நேற்று முன்தினம் அறிவித்தது.

>>>>><<<<<

கிழக்கு ராஜஸ்தான், சத்திஷ்கர், ராயலசீமா மற்றும் கர்நாடகாவின் தென்பகுதியில் இன்று மிக கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு, மேற்குவங்க மாநிலங்களிலும் புதுச்சேரி, காரைக்கால் பகுதியிலும் சில இடங்களில் நாளை வரை மிக கனமழைக்கு வாய்ப்பிருப்பதாக அது கூறியுள்ளது.

மத்தியப்பிரதேசம், சத்திஷ்கர், தில்லி, கேரளா, ஒடிசா, ஹிமாச்சலப்பிரதேசம், உத்ராகண்ட் உள்ளிட்ட மாநிலங்களில் ஒரு வார காலத்திற்கு லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தில்லியில் நாளை மறுநாள் முதல் செவ்வாய்க்கிழமை வரை மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கேரளாவில் ஒரு சில பகுதிகளில் கனமழை பெய்யக்கூடும் என்றும், வயநாடு, கோழிக்கோடு மாவட்டங்களில் இன்று ஆரஞ்ச் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேரளாவின் மற்ற 12 மாவட்டங்களில் மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கொங்கன், மஹாராஷ்ட்ராவின் மத்தியப் பகுதி, மராத்வாடா உள்ளிட்ட பகுதிகளில் அடுத்த 2 நாட்களுக்கு மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**>>>>><<<<<**

டொமினிக்கன் குடியரசில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி - பிரேஸிலின் **Fernando Romboli** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிச் சுற்றில் இந்த இணை பிரரேஸிலின் **Marcelo Demoliner – Zormann Da Silva** இணையை 3-6, 6-1, 10-8 என்ற செட்கணக்கில் வென்றது.

**>>>>>END<<<<<**